# கிராமிய சேவைத் திட்டம்

---

திருச்சி மண்டலம்
பெரம்பலூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
வெங்கலம் கிராமம்

---




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

| | |
|---|---|
| ☞ நோயற்ற வாழ்வு | ☞ குடும்ப அமைதி |
| ☞ கல்வியில் மேன்மை | ☞ கர்மயோக வாழ்க்கைநெறி |
| ☞ சுற்றுப்புற சுகாதாரம் | ☞ மனிதநேயம் |
| ☞ முதியோரைப் பாதுகாத்தல் | ☞ மதநல்லிணக்கம் |
| ☞ மகளிர் மேம்பாடு | ☞ சமுதாய விழிப்புணர்வு |

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# திருச்சி மண்டலம்
# பெரம்பலூர் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# வெங்கலம் கிராமம்

## Contents

1. செயல்பாட்டு அறிக்கை ........ 3

2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் ........ 4

3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் ........ 4

4. D.G புதூர் கிராமத்தின் தொடக்கவிழா ........ 5

5. மருத்துவ முகாம் ........ 7

6. மனநல ஆலோசனை முகாம் ........ 7

7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் ........ 7

8. மது ஒழிப்பு முகாம் ........ 8

9. முதல் நிலை அகத்தாய்வு ........ 8

10. இரண்டாம் நிலை அகத்தாய்வு ........ 8

11. மூன்றாம் நிலை அகத்தாய்வு ........ 9

12. பிரம்மஞானம் பயிற்சி ........ 9

13. அனுபவ உரை ........ 10

14. எதிர்காலத் திட்டங்கள்: ........ 17

15. வாழ்த்து: ........ 17

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | வெங்கலம் | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **29-12-2024** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **02-06-2025** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5** மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | திருச்சி | | |
| 6. | அறக்கட்டளை | பெரம்பலூர் | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | *SKY YOGA CLUB, ABUDHABI* | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:350 | பெண்:305 | மொ:655 |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:113 | பெண்:242 | மொ:355 |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:113 | பெண்:242 | மொ:355 |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:113 | பெண்:242 | மொ:355 |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:78 | பெண்:202 | மொ:280 |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:60 | பெண்:119 | மொ:179 |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:46 | பெண்:95 | மொ:141 |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:21 | பெண்:12 | மொ:33 |
| 16. | உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)* | ஆண்:37 | பெண்:34 | மொ:71 |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஶ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் **354**-வது கிராமமாக வெங்கலம் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 29-12-2024-ஆம் தேதியிலிருந்து **02-06-2025**-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. *D.G புதூர் கிராமத்தின் தொடக்கவிழா*

*SKY YOGA CLUB, ABUDHABI நிதி உதவியுடன் திருச்சி மண்டலம், பெரம்பலூர் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை சார்பாக 29-12-2024ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.***SKM.** *மயிலானந்தன் அவர்களால் (காணொளி காட்சி) மூலமாக உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும் வெங்கலம் கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*














<u>உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி</u>











## 5. மருத்துவ முகாம்

*29.01.2025 அன்று வெங்கலம் கிராமத்தில் Dr.Bhuvaneswari and VSP Medical Team மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-15, பெண்கள்-21, மொத்தம்-36 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*





## 6. மனநல ஆலோசனை முகாம்

*01.04.2025 அன்று Dr.Bhuvaneswari and Team அவர்களால் வெங்கலம் கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-09, பெண்கள்-40, மொத்தம்-49 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 22 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*





## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

*14.03.2025 அன்று வெங்கலம் கிராமத்தில் மண்டலம், அறக்கட்டளை பொறுப்பாளர்கள் மற்றும் கிராம பொருப்பாளர்களால் கிராம மக்கக்கு 110 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*





## 8. மது ஒழிப்பு முகாம்

**12.04.2025** *அன்று வெங்கலம் கிராம மக்களுக்கு Dr.Bhuvaneshari & AAA அமைப்பினர் அவர்களால் மதுஒழிப்பு முகாம் நடத்தப்பட்டது. கிராம மக்கள் மொத்தம் 38 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 9. முதல் நிலை அகத்தாய்வு




## 10. இரண்டாம் நிலை அகத்தாய்வு




## 11. மூன்றாம் நிலை அகத்தாய்வு




## 12. பிரம்மஞானம் பயிற்சி






13.அனுபவ உரை

## Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 100%of the participants are out of the depression compared to before joining the program |
| 2 | 100% of the addicted participants able to control their addiction to Tobacco, Alcohol and Drugs. |
| 3 | Around 98% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 4 | Around 98% of the participants are able to control their anger |
| 5 | Around 98% of the participants are satisfied with their children education and attitude |
| 6 | Around 97% of the participants mental health has calmed due to the SKY Meditation |
| 7 | 94% of the participants are able to eradicate worries and maintain a healthy life |
| 8 | Around 89% (582)of the participants have made progress in family peace |
| 9 | Due to SKY Exercises and meditation-485 participants cured of Joint Pain, 218 Participants cured of Blood Pressure, 146 Participants cured of Asthma / Breathing Problem, 146 participants cured of Sugar Problem, 97 participants cured of Migraine and Headache, 73 participants cured of Overweight / obesity. |
| 10 | **100% of the participants are happy with the VSP Programme compared to only 29% before joining the program** |

## Feedback Trend



வாழ்க வையகம் திரு வாழ்க குருவே துணை வாழ்க



ஐயா, வாழ்க வளமுடன், என் பெயர் சதீஸ் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் வெங்கலம் கிராமத்தில் நான் வசிக்கின்றேன் எங்கள் ஊரில் 29/12/21ல் வேதாத்திரி மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கம் அமைப்பில் மனவளக்கலை யோகா கிராமிய சேவை திட்டத்தில் இலவசமாக இருக்கின்றேன். துவக்கினார்கள் நானும் ~~அந்த~~ சேர்ந்து கொண்டு. தினம் தோறும் காலை 5 டூ 7 மாலை 5 டூ 7 வரை பயிற்சி சொல்லிக் கொடுத்தார்கள் பயிற்சி செய்து வருகிறேன். எனக்கு வயது 27 ஆகிறது என் தலையில் நீர்கட்டி இருந்து கொண்டு தலைவலி மிகவும் அதிகமாக இருந்து வந்தது அதனால் ஞாபக மறதி அதிகமாக இருந்து வந்தது, எனது தலையில் அறுவை சிகிச்சையும் செய்திருந்தேன் அதனால் நான் வெளியில் செல்லாமல் நான் வீட்டிலே இருந்து வந்தேன். அப்பொழுது தான் யோகா துவக்கினார்கள். இதில் கால் பயிற்சி, மூச்சு பயிற்சி, மகராசனம் 1,2 இவையும் கை பயிற்சி, கால் பயிற்சி செய்து வந்தேன் காயகல்பம் தவம் எடுத்துக் கொண்டேன். அதனால் இப்பொழுது நான் நன்றாக இருக்கின்றேன். வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் மற்றும் பேராசிரியர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன் வாழ்க வளமுடன்

இப்படிக்கு

க. சதீஸ்

உ

குரு வாழ்க குருவே துணை.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



D. இந்திராணி
மேலக்கடை 64/2
வெங்கலம் P.O
வேப்பந்தட்டை T.K
பெரம்பலூர் D.T

வாழ்க வளமுடன்

ஐயா! என் பெயர் D. இந்திராணி வயது 62. எங்கள் கிராமத்தில் வெங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். உலக சமுதாய 29-12-24 அன்று வேதாத்திரி மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கம் அமைப்பில் மனவளக்கலை யோகா கிராமிய சேவை திட்டத்தில் இலவசமாக துவக்கினார்கள்.

நான் யோகாவில் கலந்து கொண்டு காலை மணி 5 முதல் 7 மணி வரையும் மாலை மணி 5 முதல் 7 மணி வரையும் தினந்தோறும் பயிற்சி சொல்லிக்கொடுத்தார்கள் நானும் தினம் இரண்டு வேளையும் பயிற்சி செய்து வருகிறேன். தினமும் கை பயிற்சி, மூச்சு பயிற்சி, கால் பயிற்சி, கபால பயிற்சி, மகராசனம் இரண்டு நிலைகள் காயகல்பம் தவம் அக்கினி, துரியம் பஞ்சபூத தவம் செய்து வருகிறேன். இப்பொழுது எனக்கு இருந்த கால் வலி இடுப்பு வலி குணமாகி நன்றாக உள்ளேன்.

இந்த பயிற்சியை உருவாக்கி அளித்த வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் பயிற்சி சொல்லி கொடுத்த ஆசிரியர்கள் பெரம்பலூர் K. ராமலிங்கம், சுப்புலெட்சுமி அவர்களுக்கும் உலக சமுதாய சேவா சங்கத்தின் அறக்கட்டளை தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
D. இந்திராணி

வாழ்க வையகம் குரு வாழ்க வாழ்க வளமுடன்

குருவே துணை



வாழ்க வளமுடன். என்பெயர் [illegible]
நான் பெரம்பலூர் மாவட்டம் வெங்கலம் கி
வசிக்கிறேன். எங்கள் ஊருக்கு உலக சமுதாய
சேவா சங்கத்தின் மனவளக்கலை யோகா பயிற்சி
ஐந்து மாதகாலமாக இலவசமாக பயிற்றுவிக்கப்பட்டது
நானும் தினந்தோறும் காலை மாலை இருவேளையும்
சென்று பயிற்சி செய்தேன். உடற்பயிற்சி செய்ததின்
மூலம் உடல் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை
உடலில் எந்த பாகத்திலும் வலி இல்லாமல் இருப்பதை
உணர்ந்தேன் இப்பயிற்சியில் அளிக்கப்பட்ட அகத்தாய்வு
பயிற்சியில் நான் யார் என்பதையும் எனது
வாழ்வின் நோக்கம் என்ன என்பதையும்
உணர்ந்தேன். எனக்கு நீண்ட நாட்களாக
குடிபழக்கம் இருந்து வந்தது. அகத்தாய்வு
பயிற்சியின் மூலம் இப்பழக்கத்திலிருந்து முற்றிலும்
விடுபட்டுள்ளேன். மேலும் இப்பயிற்சியை ஐந்து மாத
நிறைவுக்கு பிறகும் நானும் எனது ஊர் மக்களும்
தொடர்ந்து செய்வோம் என்று உறுதி கூறுகிறேன்.
காயகல்ப பயிற்சியின் மூலம் நான் இந்த
ஐந்து மாதகாலமாக மருத்துவமனைக்கு செல்லாமல்
நோய் எதிர்ப்பு சக்தியை பெற்றுள்ளேன். மனவளக்கலை
யோகா பயிற்சியோடு எங்கள் ஊரில் பல கேம்புகள்
நடைபெற்றன. அதில் ஆரோக்கிய நலவாழ்வு என்ற
முகாமும் நடைபெற்றது. பயிற்சியின் மூலம் இக்கொடிய
பழக்கத்திலிருந்து விடுபட்ட நான் என் ஊரில் உள்ள என்
நண்பர்களுக்கும் இப்பயிற்சியை கொண்டு சேர்ப்பேன் என்று
உறுதி கூறுகிறேன் இப்பயிற்சியை எங்களுக்கு அளித்த
குரு அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும்
உலக சமுதாய சேவா சங்கத்திற்கும் பெரம்பலூர்
அறக்கட்டளைக்கும் ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த
வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்து கொள்கிறேன் இப்படிக்கு

வாழ்க வையகம்

வாழ்க வையகம்

வாழ்க வளமுடன்

திரு வாழ்க
குருவே துணை



வாழ்க வளமுடன். என் பெயர் சிவகுமார். நான் பெரம்பலூர் மாவட்டம் வெங்கலம் கிராமத்தில் வசிக்கிறேன். எங்கள் ஊருக்கு உலக சமுதாய சேவா சங்கத்தின் மனவளக்கலை யோகா பயிற்சி ஐந்து மாதகாலமாக இலவசமாக பயிற்றுவிக்கப்பட்டது. நானும் தினந்தோறும் காலை மாலை இருவேளையும் சென்று பயிற்சி செய்தேன். உடற்பயிற்சி செய்ததன் மூலம் உடல் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் உடலில் எந்த பாகத்திலும் வலி இல்லாமல் இருப்பதை உணர்ந்தேன். எனக்கு நீண்ட காலமாக சர்க்கரைநோய் உள்ளது. காயகல்பம் மற்றும் உடற்பயிற்சியின் மூலம் அதிலிருந்து மீண்டேன். எனது சர்க்கரைநோய் அளவு இப்போது நார்மலாக ஆகிவிட்டது. நானும் எனது ஊர் மக்களும் தொடர்ந்து

செய்வோம். முன்பு எனக்கு நானூறு அளவு இருந்தது. இந்த பயிற்சியின் மூலம் நூற்று ஐம்பது அளவிற்கு அமைந்துள்ளது. அகத்தாய்வு பயிற்சியின் மூலம் எனக்கு உணவில் ஒழுங்கு வந்துள்ளது. மனவளக்கலை யோகா பயிற்சியோடு எங்கள் ஊரில் பல கேம்புகள் முகாமும் நடைபெற்றது. பயிற்சிகள் மூலம் இக்கொடிய பழக்கத்திலிருந்து விடுபட்ட நான் என் ஊரில் உள்ள என் நண்பர்களுக்கும் இப்பயிற்சிகள் கொண்டு சேர்ப்பேன் என்று உறுதி கூறுகிறேன். இப்பயிற்சிகளை எங்களுக்கு அளித்த குரு அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் உலக சமுதாய சேவா சங்கத்திற்கும் பெரம்பலூர் அறக்கட்டளைக்கும் ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
N. Sivakumar



குருவாழ்க குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

மலர்செல்வி,
மேலத்தெரு
வெங்கலம் P.O
வேப்பந்தட்டை T.K.
பெரம்பலூர் D.T

வாழ்க வளமுடன்

ஐயா! என் பெயர் மலர்செல்வி வயது 58 வெங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன் எங்கள் கிராமத்தில் 09-12-24 அன்று வேதாத்திரி மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கம் மூலம் மனவளக்கலை யோகா கிராமிய சேவை திட்டத்தில் இலவசமாக துவக்கினார்கள்

நான் தினம் யோகாவில் கலந்து கொண்டு காலை 5 to 7 மாலை 5 to 7 மணி வரையும் பயிற்சி நடைபெறுகிறது நானும் தாயும் இரண்டு வேளையும் கைபயிற்சி, கால் பயிற்சி, கண் பயிற்சி, காயகல்ப பயிற்சி, மகராசனம் என்று நிலைகளும் அக்கு பிரசர், தவம், சக்தி, தியானம், பஞ்சபூத தவமும் அனைத்தும் செய்து வந்ததில் எனக்கு இருந்த மூட்டுகால் வலி, இடுப்பு வலி குணமாகி நலமாக உள்ளேன்

இந்த பயிற்சியை உருவாக்கி தந்த வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் உலக சமுதாய சேவா சங்கத்திற்கும் பயிற்சி சொல்லி கொடுத்த ஆசிரியர்கள் K. ராமலிங்கம், சுப்புலட்சுமி அவர்களுக்கும் பெரம்பலூர் அடைக்கட்டளை தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
B. மலர்செல்வி

2

ஸ்ரீ வாழ்க குருவே துணை.
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்.



வாழ்க வளமுடன்

ஐயா! என் பெயர் J. ராஜாத்தி வயது 55 வெங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் கிராமத்தில் 29-12.2024 அன்று வேதாத்திரி மகரிஷியின் உலக சமுதாய சேவா சங்கம் அமைப்பில் மனவளக்கலை யோகா கிராமிய சேவை திட்டத்தில் இலவசமாக துவக்கினார்கள்.

நான் யோகாவில் கலந்து கொண்டு காலை 5 to 7 மாலை 5 to 7 வரையும் தினந்தோறும் பயிற்சி சொல்லிக் கொடுத்தார்கள். நானும் தினந்தோறும் காலையும், மாலையும் பயிற்சி செய்து வருகிறேன். தினமும் கைப்பயிற்சி, மூச்சுப்பயிற்சி, கால்பயிற்சி, கண்பயிற்சி, மகராசனம் 1,2 நிலைகள், காயகல்பம், தவம், ஆக்கினை, துரியம் தவம் நன்றாக செய்து வருகிறேன். இப்பொழுது கால் வலி இருந்தது. இப்பொழுது பயிற்சி நாள்தோறும் செய்து வந்து இப்பொழுது நான் நன்றாக இருக்கின்றேன். எனக்கு [illegible] நோய்க்கு மருந்து எடுத்து வந்தேன் காயகல்பம் பயிற்சியின் மூலம் மாத்திரையின் அளவு குறைந்தது. இப்பயிற்சி பயிற்சி உருவாக்கிய வேதாத்திரி மகரிஷி அவர்களுக்கும் மற்றும் இப்பயிற்சியின் ஆசிரியர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு.
J. ராஜாத்தி

## 14. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க வெங்கலம் கிராமம், பெரம்பலூர் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 15. வாழ்த்து:

வெங்கலம் கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி *SKY YOGA CLUB, ABUDHAB* -க்கும் இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்த திருச்சி மண்டல பொறுப்பாளர்களுக்கும், பெரம்பலூர் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் *Prof.K.Ramalingam & Prof.S.Kuppulakshmi* அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய *VSP* நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை
உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.
உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே
உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.

-வேதாத்திரி மகரிஷி

தொண்டாற்றி இன்பம் காண்போம்! நன்றி, வாழ்க வளமுடன்!

குருவின் சேவையில்
*WCSC-VSP* இயக்குனரகம்
அறிவுத்திருக்கோயில், ஆழியார்